## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதல் கலைமாணித் தேர்வு பகுதி – II 1999/2000 (வெளிவாரி)
## (டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

## EDU 302 வகுப்பறைக் கற்பித்தலைத் திட்டமிடலும் முகாமை செய்தலும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01. (அ) வகுப்பறைக் கற்பித்தலுக்காக ஒரு பாடத்தில் உள்ள அலகுகளைத் திட்டமிடுவதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஒரு பாட அலகை வகுப்பறைக் கற்பித்தலுக்காகத் திட்டமிடும்போது கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் பற்றிச் சுருக்கமாகக் கூறுக.

(10 புள்ளிகள்)

02. "ஓர் ஆசிரியர் பத்து வருடத்துக்குமேல் அனுபவம் கொண்டவராகவும் சிறந்த ஆசிரியர் என மாணவர்களால் மதிக்கப்படுபவராகவும் இருக்கிறார். ஏனினும் அவர் பாடத்திட்டமோ அல்லது அலகுத் திட்டமோ வைத்திருப்பதில்லை."

(அ) இவ்வாசிரியரின் செயற்பாடு பற்றி உமது கருத்து யாது?

(08 புள்ளிகள்)

(ஆ) உமது கருத்துக்கு ஏற்ப அவ்வாசிரியருக்கு எவ்வாறு பராட்டு வழங்குவீர் அல்லது ஆலோசனை கூறுவீர் எனச் சுருக்கமாக கூறுக.

(12 புள்ளிகள்)

03. (அ) கற்பித்தல் செயற்பாட்டில் மீள வலியுறுத்தல் அவசியம் என்பதை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) மீளவலியுறுத்தல் செயற்பாட்டை எப்போது, எப்படி, யாருக்கு வழங்குவீா் என விபரிக்க.

(10 புள்ளிகள்)

04. (அ) குழு முறைக் கற்பித்தல் என்றால் என்ன?

(05 புள்ளிகள்)

(ஆ) குழு முறைக்கற்பித்தலின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் விபரிக்க.

(15 புள்ளிகள்)

05. (அ) "பிரச்சினை விடுவித்தல்" முறை பிரபல்யம் அடைந்து வருவதற்கான காரணங்களை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) பிரச்சினை விடுவித்தல் அவசியம் என்பதை வலியுறுத்த 'டியுயி' எவ்வாறு வலியுறுத்துகின்றார்.

(10 புள்ளிகள்)

06. (அ) ஒரு மாணவன் சுயமாகக் கற்பது சிறந்ததா? அல்லது ஆசிரியர் ஒருவரிடம் கற்பது சிறந்ததா? என ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) சுய கற்றல், சிந்தனை விருத்திக்கு எவ்வாறு உதவும் என்பதை சுருக்கமாக ஆராய்க.

(08 புள்ளிகள்)

07. (அ) கற்பித்தலின்போது குறிக்கோள்களைத் தீர்மானிப்பதில் உள்ளடக்கும் விடயங்களை கூறுக.

(08 புள்ளிகள்)

(ஆ) நீர் உள்ளடக்கும் விடயங்களில் இரு விடயங்கள் பற்றி ஏன் அவைஉள்ளடக்கப்பட வேண்டும் எனச் சுருக்கமாக கூறுக.

(12 புள்ளிகள்)

08. (அ) வினா முறை கற்றல் கற்பித்தலில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(ஆ) சிறந்த வினாக்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

********